FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069069

1. District : நாகப்பட்டினம் PS: ஊழல் தடுப்பு காவல்நிலையம் நாகப்பட்டினம் Year: ஆண்டு 2026 FIR No: 02/2026 Date: 10.06.2026
   மாவட்டம் முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 and 7 r/w 12 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
   குற்ற நிகழ்வு நாள் 04.6.2026 நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 15.30 hrs Time to : 21.00 hrs
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 04.06.2026 / 10.06.2026 Time : 23.00 hrs / 15.30 hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) — do — Time : — do —
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 25 கி.மீ தொலைவு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : (b) Address : நீதிமன்ற சார்-பதிவாளர் அலுவலகம், நாகப்பட்டினம்
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : T. M. இளங்கோவன் (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : 52/2026 (d) Nationality : (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : அலுவலக அலுவலர் (g) Address : மாவட்ட அமர்வு நீதிமன்ற அலுவலகம், நாகப்பட்டினம்.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திரு. D. அனந்தகிருஷ்ணன், உதவியாளர்/சார் பதிவாளர் (பொறுப்பு) சார்பதிவாளர் அலுவலகம், நீதிமன்ற வளாகம், நாகப்பட்டினம்
   (2) திரு. E. ஜெயராமன், த/பெ. [illegible] சார் அலுவலர், நீதிமன்ற வளாகம், நாகப்பட்டினம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் அலுவலர் எதிரி சார் என்பதால் காவல் நிலையம் சென்று புகார் அளிக்க தயக்கம் காட்டியதால் மேல் அலுவலர் மூலம் வழிகாட்டி பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான், திரு.M.குணசேகரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் என்பவர் 04.06.2026 ஆம் தேதி 23.00 மணியளவில் கொடுத்த புகார் அறிக்கையின் மீது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட ஆலோசகர்களிடம் தகுந்த அறிவுரை பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், M.குணசேகரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் தாலுக்கா திருப்பூண்டி சார் பதிவாளர் மற்றும் அலுவலக அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத் தரகர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெற்றுவருவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 04.06.2026 ஆம் தேதி மாலை 15.30 மணி முதல் 21.00 மணி வரை மேற்படி திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, சார் பதிவாளர் (பொறுப்பு) திரு.D.ஆனந்தநடராஜன் என்பவரது அலுவலக அறையில் இருந்த 04.06.2026ஆம் தேதி நான்கு ஆவணங்களை தயார் செய்து, தாக்கல் செய்த இடைத்தரகர் திரு.E.இளமாறன், ஸ்ரீசாய் ஆவண தயாரிப்பக

(தனி நான்கு இணை இருப்பதாகும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம்/
பெருவிரல் இரேகைப் பதிவு 10.6.2026

Signature of the Officer in-charge, Police Station 10.6.2026
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10.6.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.RAMESH KUMAR
Rank: நிலை Inspector of Police
No. எண்
-Vigilance and
ANTI-Corruption
Nagapattinam

நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

உரிமையாளர், திருப்பூண்டி என்பவர் தான் வைத்திருந்த ரூபாய் 51,500/- பணத்திற்கு சரியான முகாந்திரம் கூற இயலாமல் வைத்திருந்த, சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் ஆவணம் பதிவு செய்ய வந்தவர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்று சார் பதிவாளர் மற்றும் அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் அந்த பணம் ரூபாய்.51,500/- திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கை மகஜருடன், மகஜரில் கண்டபடி கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய்.51,500/-, மகஜரில் கைப்பற்றப்பட்ட (1) அலுவலக வருகைபதிவேடு-2026, (2) DEO & IPco வருகை பதிவேடு 2026, (3) தனி நபர் ரொக்க கையிருப்பு பதிவேடு 21.11.2025 முதல் உள்ளது ஆகியவற்றையும், (4) 04.06.2026ஆம் தேதிய A-கணக்கு பதிவு விவரம், (5) 04.06.2026ஆம் தேதி டோக்கன் வழங்கப்பட்ட பதிவுகளின் விவரங்களை கணினியிலிருந்து பிரிண்ட் அவுட் எடுத்து கையொப்பமிட்டு ஆஜர் செய்தது மற்றும் திரு.E.இளமாறன், த/பெ. இளங்கோவன், ஸ்ரீசாய் ஆவண தயாரிப்பக உரிமையாளர், திருப்பூண்டி (திரு.N.தமிழ்செல்வன், ஆவண எழுத்தர் என்பவரின் உதவியாளர்) என்பவரை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். மேற்படி திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் இடைத்தரகர்களை அலுவலக விதிமுறைகளுக்கு முறனாக அலுவலகத்தில் அனுமதித்த திரு.D.ஆனந்தநடராஜன், உதவியாளர்/சார் பதிவாளர் (பொறுப்பு), சார் பதிவாளர் அலுவலகம், திருப்பூண்டி மற்றும் திரு.E.இளமாறன், த/பெ. இளங்கோவன், ஸ்ரீசாய் ஆவண தயாரிப்பக உரிமையாளர், திருப்பூண்டி (திரு.N.தமிழ்செல்வன், ஆவண எழுத்தர் என்பவரின் உதவியாளர்) ஆகியோர்கள் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம்- M.குணசேகரன் 04.6.2026 (M.குணசேகரன்) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர். நாள்.04.06.2026. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 04.06.2026 ஆம் தேதி மாலை சுமார் 15.30 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், கீழவேளூர் தாலுக்கா, திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தை திரு.M.குணசேகரன், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.கரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுக்கா, திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகம் திருப்பூண்டி மாரியம்மன்கோயில் தெருவில், காமேஷ்வரம் ரோட்டிற்கு வடபுறம் அமைந்துள்ளது. சார் பதிவாளர் அலுவலகம் தெற்கு பார்த்த RCC கட்டிடமாகும். திருப்பூண்டி சார் பதிவாளர் மற்றும் சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள்

மற்றும் இடைத் தரகர்கள் மூலமாக பத்திர பதிவு செய்பவர்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்கு கையூட்டு கேட்டு பெற்றுவருவதாகவும், மேற்படி சார் பதிவாளர் அலுவலக பணியாளர்களுக்காக, பத்திர பதிவு செய்ய வருவபர்களிடம் ஆவண எழுத்தர்கள் கையூட்டு பெற்று சார் பதிவாளர் அலுவலக பணியாளர்களுக்கு கையூட்டு கொடுப்பதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 04.06.2026 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் தீடீர் ஆய்வுக்கு செல்ல வேண்டியது குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளராகிய என்னை நியமித்ததன் பேரில், நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று மதியம் 14.00 மணிக்கு வந்த போது, காவல் ஆய்வாளர் என்னிடம் திருப்பூண்டி சார் பதிவாளர் திரு.து.ஆனந்தநடராஜன் மற்றும் சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத் தரகர்கள் மூலமாக கையூட்டு கேட்டு பெற்றுவருவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை தெரிவித்தும், திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தை தீடீர் ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கூறியதன் அடிப்படையில், அங்கிருந்து நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.க.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் அரசு வாகனத்தில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து மதியம் 14.30 மணியளவில் புறப்பட்டு, திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு 15.30 மணியளவில் வந்து, திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த சார் பதிவாளர் பொறுப்பு திரு.து.ஆனந்தநடராஜன், உதவியாளர் மற்றும் அலுவலர்களிடம் தீடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து தீடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகமானது, ஒரே தளத்துடன் கூடிய RCC கட்டிடத்தில் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தின் முன்புறம் போர்ட்டிகோவும், அதற்கு அடுத்தாற்போல் ஒரு வராண்டா உள்ளது. அந்த வராண்டாவிற்கு மேற்கு பக்கம் சார் பதிவாளர் அலுவலக அறை உள்ளது. அதன் மையத்தில் சார் பதிவாளர் இருக்கை கிழக்கு பார்த்தும், அவருக்கு வலது புறம் கணினி முகப்பு உதவியாளர் இருக்கையும், அவருக்கு இடது பக்கம் IP Camara Operator இறுக்கையும் உள்ளது. அந்த அறையின் தென்புறம் கண்ணாடி தடுப்புடன் கூடிய கணினி அறையும் உள்ளது. மேற்படி சார் பதிவாளர் அறைக்கு மேற்குப்பக்கம் பதிவேடுகள் அறை உள்ளது. மேற்படி சார் பதிவாளர் அறைக்கு வடகிழக்கில் கழிவறையும், அதற்கு எதிரே பழைய பதிவேடுகள் அறையும் உள்ளது. தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்து கொண்டபோது, மேற்படி அலுவலகத்தில் இருந்தவர்கள் அவரவர் இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் அங்கிருந்தவர்களை விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் நிறுத்தி

அவர்களை தனித்தனியாக விசாரிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் உள்ளே நுழைந்த போது, பத்திர பதிவு செய்வதற்காக உள்ளே காத்திருந்தவர்களை விசாரணை செய்து, அவர்களது பணி முடித்துக்கொண்டு செல்ல அறிவுறுத்தப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் (1) திரு.D.ஆனந்த நடராஜன், உதவியாளர்/பொறுப்பு சார் பதிவாளர், (2) செல்வி.S.அட்சுதா, இளநிலை உதவியாளர், (3)திருமதி. M.கலைவாணி, கணிணி முகப்பு உதவியாளர் (Data Entry Operator) (4) திருமதி. T.திவ்யா, IP Camara Operator ஆகியோர் ஆஜரில் இந்தனர். மேலும் மேற்படி சார் பதிவாளர் அலுவலக அறையில் (1) திரு.E.இளமாறன், த/பெ.இளங்கோவன், ஸ்ரீசாய் ஆவண தயாரிப்பக உரிமையாளர், திருப்பூண்டி (திரு.N.தமிழ்செல்வன், ஆவண எழுத்தர் என்பவரின் உதவியாளர்), (2) திரு.கலையரசன், த/பெ. பன்னீர்செல்வம், திருப்பூண்டி ஸ்ரீ ஆவணம் தயாரிப்பக உரிமையாளர் திரு.சக்திவேல் என்பவரின் உதவியாளர் ஆகியோர்களும் மற்றும் ஆவணம் பதிவுகள் சம்மந்தமாக வந்திருந்த நபர்களான (3) திரு.A.மாதவன், த/பெ.அய்யப்பன், வாட்டாக்குடி, (4) திரு.சங்கர், த/பெ. அமிர்தலிங்கம், புதுத்தெரு, வாட்டாக்குடி, (5) திரு.ஸ்டாலின், த/பெ. அன்பழகன், வாட்டாக்குடி, (6)திரு.முருகன், த/பெ.ராஜகோபால், வாட்டாக்குடி, (7)திரு.ராஜமோகன், த/பெ.பூமாலை, தலைஞாயிறு, (8) திரு.விக்னேஷ், த/பெ. பக்கிரிசாமி, நத்தம்பள்ளம், (9) திரு.அய்யப்பன், த/பெ.ராஜகோபல், வாட்டாக்குடி, (10)திருமதி.சுசீலா, க/பெ.உத்திராபதி, வாட்டாக்குடி ஆகியோர் ஆஜரில் இருந்தனர், மேலும் சார் பதிவாளர் அறைக்கு எதிரே உள்ள வராண்டாவில் (11)திரு.மகேஷ், த/பெ.வாசு, வழக்கறிஞர், புலிவலம், திருவாரூர், (12)திரு.சந்தோஷ், த/பெ.பரமசிவம், புளிச்சகாடி, திருவாரூர், (13) திரு.பிரகாஷ், த/பெ.ராஜ்மோகன், திருமாளம், (14) திரு.தமிழரசன், த/பெ.செல்வராஜ், வாளக்கரை ஆகியோர் இருந்தனர். மேற்படி நபர்களை தனித்தனியாக விசாரணை செய்தும், தனித்தனியாக சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அவர்கள் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறியவர்களிடம் அந்த தொகை அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலக அறையையும், பதிவுகள் வைப்பறையையும் சோதனை செய்யப்பட்டது. மேற்படி திரு.இளமாறன் என்பவரிடம் விசாரணை செய்த போது அவர் இன்றைய தினம் நான்கு ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பதாகவும், தனக்கு ஆவண எழுத்தர் உரிமம் இல்லை என்றும், தான் ஆவணம் தயார் செய்து, வழக்கறிஞர் திரு.தமிழ்செல்வன் என்பவரிடம் கையொப்பம் பெற்று தாக்கல் செய்வது வழக்கம் என்றும், அதேபோல் இன்று தாக்கல் செய்த நான்கு ஆவணங்களுக்கும் திரு.தமிழ்செல்வன் அவர்களிடம் கையொப்பம் பெற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் தான் ரூபாய் 51,500/- வைத்திருப்பதாக எடுத்து ஆஜர் செய்து, அந்த பணம் இன்றைய தினம் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த தலைஞயிறு 4ம் சேத்தியைச் சேர்ந்த மாதவன் என்பவர் தன்னிடம் கொடுத்த பணம் என்று தெரிவித்தார். அது சம்மந்தமாக அங்கிருந்த மேற்படி மாதவன் என்பவரிடம் விசாரிக்க தான் இன்றைய தினம் பதிவு செய்ய ரூபாய் 55000/- மட்டும் எடுத்து வந்ததாகவும், பத்திர பதிவு செய்ய ஆவண எழுத்தருக்கோ, இளமாறன் என்பவருக்கோ எந்த பணமும் கொடுக்கவில்லை என்று தெரிவித்தார். எனவே இளமாறன் தான் வைத்திருந்த மேற்படி பணத்திற்கு சரியான முகாந்திரம்

கூறவில்லை, எனவே சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் ஆவணம் பதிவு செய்ய வந்தவர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்று சார் பதிவாளர் மற்றும் அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் மேற்படி பணம் **ரூபாய்.51,500/-ம்** திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அலுவலகர்கள் மற்றும் பொதுமக்கள் அவர்கள் வைத்திருந்த கீழ்கண்ட தொகைகளுக்கு சரியான முகாந்திரம் கூறியதால் அந்த பணம் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்	கைப்பற்றப்பட்ட ரூபாய்
1.	திரு.D.ஆனந்த நடராஜன், உதவியாளர்/ பொறுப்பு சார் பதிவாளர்,	200/-	--
2.	செல்வி.S.அட்சுதா, இளநிலை உதவியாளர்	350/-	--
3.	திருமதி.M.கலைவாணி, கணினி முகப்பு உதவியாளர் (Data Entry Operator)	200/-	--
4.	திருமதி.T.திவ்யா, IP Camara Operator	300/-	--
5.	திரு.E.இளமாறன், ஸ்ரீசாய் ஆவண தயாரிப்பக உரிமையாளர், திருப்பூண்டி	320/-	51,500/-
6.	திரு.கலையரசன், ஸ்ரீ ஆவணம் தயாரிப்பக உதவியாளர்	800/-	--
7.	திரு.A.மாதவன், வாட்டாக்குடி,	55,000/-	--
8.	திரு.சங்கர், வாட்டாக்குடி,	200/-	--
9.	திரு.முருகன், வாட்டாக்குடி,	800/-	--
10.	திரு.விக்னேஷ், நத்தம்பள்ளம்,	450/-	--
11.	திரு.அய்யப்பன், வாட்டாக்குடி,	580/-	--
12.	திரு.மகேஷ், வழக்கறிஞர், புலிவலம், திருவாரூர்.	2500/-	--
13.	திரு.சந்தோஷ், புளிச்சகாடி, திருவாரூர்,	4200/-	--
14.	திரு.பிரகாஷ், திருமாளம்,	50/-	--
15.	திருதமிழரசன், வாளக்கரை	50/-	--
	கூடுதல்	**66,000/-**	**51,500/-**

மேற்படி அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததாலும், மேலும் அலுவலர்கள் அவர்கள் வைத்திருந்த பணம் பற்றி பணம் கையிருப்பு பதிவேடு-2026ன்படி சரியாக இருந்ததாலும் அந்த பணம் ரூபாய் 66,000/- அவரவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் சார் பதிவாளரிடம் இன்றைய பதிவு விவரம் பற்றி கேட்க, இன்று 04.06.2026ஆம் தேதி 17 பதிவுகளுக்கு உண்டான டோக்கன் வழங்கப்பட்டதாகவும், அதில் 12 பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், 4 ஆவணங்கள் ஆஜர்படுத்தப்படவில்லை என்றும், 1 ஆவணம் முழுமையாக கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் இன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட

ஆவணங்கள் மற்றும் அலுவலக வருகைபதிவேடு மற்றும் பணம் கையிருப்பு பதிவேடு ஆகியவற்றை ஆஜர் படுத்துமாறு கேட்க, சார் பதிவாளர் (பொ) திரு.ஆனந்த நடராஜன் அவர்கள் (1) அலுவலக வருகைபதிவேடு-2026, (2)DEO & IPco வருகை பதிவேடு 2026, (3) தனி நபர் ரொக்க கையிருப்பு பதிவேடு 21.11.2025 முதல் உள்ளது ஆகியவற்றையும், (4) 04.06.2026ஆம் தேதிய A-கணக்கு பதிவு விவரம் மற்றும் (5) 04.06.2026ஆம் தேதி டோக்கன் வழங்கப்பட்ட பதிவுகளின் விவரம் ஆகியவற்றை கணினியிலிருந்து பிரிண்ட் அவுட் எடுத்து கையொப்பமிட்டும் ஆஜர் செய்ததையும் மற்றும் திரு.இளமாறன் என்பவர் வைத்திருந்த தொகையான ரூ.51500/- க்கு சரியான முகாந்திரம் கூறததால், மேற்படி தொகையானது திருப்பூண்டி சார் பதிவாளருக்கோ அல்லது அலுவலர்களுக்கோ குற்றமுறு நோக்கத்துடன் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், மேற்கண்ட மொத்த தொகை ரூ.51,500/-யும் மேல் நடவடிக்கைக்காக திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வின் முடிவில் திரு.E.இளமாறன், த/பெ.இளங்கோவன், ஸ்ரீசாய் ஆவண தயாரிப்பக உரிமையாளர், திருப்பூண்டி (திரு.N.தமிழ்செல்வன், ஆவண எழுத்தர் என்பவரின் உதவியாளர்) என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 04.06.2026 ஆம் தேதி மாலை 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

Hon'ble Sir, Submitted:

Received the Computer typed complaint on 04.06.2026 at about 23.00 hours, after getting suitable instructions from the Superior Officers and Law Officers of DVAC, Chennai, I am registering a case in Nagapattinam Vigilance and Anti-Corruption Cr.No.2/2026 U/s. 7 and 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 15.30 hours on 10.06.2026.

10.06.2026

(G.Ramesh Kumar)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.

Original FIR along with the Original complaint of Tr.M.Gunasekaran, Inspection Cell Inspection, District Inspection Cell Office, Thanjavur, Surprise Check Proceedings cum Mahazar, Statement of Tr.E.Elamaran S/o.Elangovan are submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Nagapattinam, copy of the FIR will be submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai and a copy filed in the CD file.

10.06.2026.

(G.Ramesh Kumar)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.